NATIONAL CHRISTIAN EVANGELICAL ALLIANCE
SRI LANKA

# கோவிட் - 19 தொற்றினை கையாள்வதற்கு சட்டத்தினை முறையாகப் பயன்படுத்துதல்

இந்த கொள்கைச் சுருக்கமானது பொது சுகாதார சட்ட மாதிரியின் பண்புகள் மற்றும் பொது சுகாதார நெருக்கடி ஒன்றின் போது சட்டத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை கோடிட்டுக் காட்டுகின்றது. அனைவருக்கும் சமமான பாதுகாப்பு மற்றும் பொதுமக்களிடையே நம்பிக்கையை வளர்ப்பதே இதன் நோக்கமாகும்.

இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவம் *(NCEASL)* தயாரித்து வழங்குமாறு கேட்டுக்கொண்ட இந்த கொள்கைச் சுருக்கத்தை, சட்டத்தரணி எர்மிஸா டீகல் தயாரித்துள்ளார். சட்டத்தரணி ஜுவனிடா அருளானந்தம் உதவி வழங்கியுள்ளார். இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிஷேசக ஐக்கியத்துவத்தின் ஜஷான் ஜெகசோதி மற்றும் ரோஷெல் மோசஸ் ஆகியோர் ஆராய்ச்சி உதவிகளை வழங்கியுள்ளனர். சட்டம் மற்றும் சமூக அறக்கட்டளையின் *(Law and Society Trust)* சகுந்தலா கதிர்காமர் மற்றும் சட்டத்தரணி ஷெலோமி டானியல் ஆகியோரிடமிருந்து கிடைக்கப்பெற்ற கருத்துக்களுக்கு நாங்கள் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வலுவான சுகாதார அமைப்புக்களை வசதிப்படுத்தும் வலுவான உள்நாட்டு சட்டங்களின் முக்கியத்துவத்தினை உலக சுகாதார அமைப்பு (WHO) அங்கீகரித்துள்ளது. உலக சுகாதார அமைப்பு கோவிட் - 19 சட்ட ஆய்வகங்களை ஆரம்பித்துள்ள நிலையில், “மோசமாக வடிவமைக்கப்பட்ட, நடைமுறைப்படுத்தப்பட்ட அல்லது செயற்படுத்தப்பட்ட சட்டங்கள் ஓரங்கட்டப்பட்ட மக்களை பாதிக்கும், களங்கம் மற்றும் பாகுபாட்டை தோற்றுவிப்பதுடன், தொற்றுநோயை தடுப்பதற்கான முயற்சிகளை பாதிக்கும்” எனத் தெரிவித்துள்ளது.1 நன்கு வடிவமைக்கப்பட்ட சட்டங்கள் வலுவான சுகாதார அமைப்புக்களை உருவாக்க உதவும்; பாதுகாப்பான மற்றும் பயனுள்ள மருந்துகள் மற்றும் தடுப்பூசிகளை மதிப்பீடு செய்வதுடன் அவற்றுக்கு அனுமதியளிக்கும்; மற்றும் சுகாதாரமான, பாதுகாப்பான பொது இடங்கள் மற்றும் பணியிடங்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை செயல்படுத்த உதவும். இலங்கையில் நாம் செய்யக்கூடியது இன்னும் அதிகமாக உள்ளது.

பொது சுகாதார சட்டங்கள் பொதுமக்களுக்கும் சுகாதார பிரச்சினைகளுக்கும் இடையிலான உறவினை நிர்வகிக்கின்றன. அனைத்து சட்டங்களையும் போன்று, இலங்கையர்கள், சட்டங்களை உருவாக்குவதற்கு பாராளுமன்றத்திற்கும், இந்த சட்டங்களைப் பயன்படுத்தி நாட்டினை நிர்வகிப்பதற்கு ஆட்சியிலுள்ளவர்களுக்கும், அதிகாரங்கள் மக்களின் நலனுக்காக பயன்படுத்தப்படுகின்றனவா என்பதை சரிபார்ப்பதற்கு நீதித்துறைக்கும் அதிகாரத்தை வழங்கியுள்ளனர்.

### பொது சுகாதார நெருக்கடியின் சூழலில் தேவைப்படுவது:

- தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அடிக்கடி தெளிவான செய்தி வழங்குதல்
- சுகாதார தகவல்கள்/ சேவைகளை அணுகுவது தொடர்பில் அடிக்கடி தெளிவான செய்தி வழங்குதல்
- களங்கத்தை ஏற்படுத்தாத வகையில் தெளிவான செய்திகளை அடிக்கடி வழங்குதல். தொற்றுக்குள்ளானவர்கள் அல்லது தொற்று ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுபவர்கள் அனைவரும் நோயாளிகளே, அவர்கள் குற்றவாளிகள் போன்று நடத்தப்படுவதோ, அன்னியப்படுத்தப்படுவதோ அல்லது அவர்களுக்கான கண்ணியம் அல்லது மரியாதை மறுக்கப்படவோ கூடாது.
- பொதுமக்களின் ஆதரவு ஊக்கப்படுத்தப்பட வேண்டும். தண்டனை வழங்கும் விதமான நடைமுறைகள் தீங்கினை ஏற்படுத்தும், அவற்றுக்கு ஊக்கமளிக்கக்கூடாது.
- மக்களின் சமூக – பொருளாதார நிலை, மன நலம் மற்றும் பிற தேவைகள் மதிப்பிடப்படுவதுடன், கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

## பொது சுகாதார நெருக்கடிக்கான குறிப்பிட்ட சட்டம்/ சட்டங்கள்:



பொது சுகாதார நெருக்கடியின் சூழலுக்கு பதிலளிக்க வேண்டும்

அரசாங்கத்தின் நடவடிக்கைகளை செயல்படுத்த வேண்டும் (சட்டபூர்வம் மற்றும் நியாயத்தை உறுதிப்படுத்த வேண்டும்)

அடிப்படை உரிமைகள் மீதான எந்தவொரு கட்டுப்பாடுகளும் பொது சுகாதார நெருக்கடியின் விகிதாச்சாரமாக இருக்க வேண்டும், "புதிய இயல்புநிலை"யாக மாறுவதற்கு அனுமதியளிக்கக்கூடாது.

## பொது சுகாதார நெருக்கடியைக் கையாள்வதற்கான வலுவான சட்டங்கள் என்ன செய்ய வேண்டும்:

1. இணைக்க வேண்டும்
2. பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும்
3. தொடர்புகொள்ள வேண்டும்
4. பாதுகாக்க வேண்டும்
5. தேவையான விதிவிலக்குகளை வரையறுக்க வேண்டும்

## 1 அறிவியல் தகவல்களை பொதுச்சூழலுக்கு இணைக்க வேண்டும்

ஒவ்வொரு சுகாதார நெருக்கடியும் தனக்கென சொந்தமான அறிவியல் தகவல்களைக் கொண்டுள்ளன. நெருக்கடி நிகழும் போதே, அறிவியல் தகவல்களை கண்டறியும் செயற்பாடும் நடைபெறலாம். எனவே தான் மக்களுடன் அறிவியல் தகவல்களை இணைப்பதற்கான பங்கு மற்றும் பொறுப்பு அரசாங்கத்திடம் வருகின்றது. பொருத்தமான கல்வித்தகுதி மற்றும் அனுபவத்தைக் கொண்ட தனிநபர்கள் மக்களுடன் இணைக்கும் இந்த செயற்பாட்டுக்கு தலைமை தாங்க வேண்டும். உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் முடிந்தவரையில் சீக்கிரமாக பகிரப்படுவதுடன், சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் மொழியில் பகிரப்பட வேண்டும். தகவல்கள் பொதுச்சூழலுக்கு பொருத்தமானதாக ,

இருப்பதுடன், கல்வித்துறை, போக்குவரத்து துறை, தொழிற்துறை, விவசாயத் துறை, தோட்டத்துறை போன்ற பிற துறைகளில் உள்ள வல்லுனர்கள், துறைகள் மற்றும் அந்த துறைகளில் உள்ளவர்கள் எவ்வாறு பாதிக்கப்படலாம், அத்துடன் ஒவ்வொரு துறைகளிலும் உள்ள மக்களை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு என்ன நடைமுறைகள் பொருத்தமானவை என்பது தொடர்பான கருத்துக்களை பகிர வேண்டும்.



## 2 தீர்மானம் எடுப்பதில் அனைத்து பிரஜைகளையும் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் – பாலினம், சிறுபான்மையினர், சிரேஷ்ட பிரஜைகள், குறைந்த வருமானம் பெறுபவர்கள்



பொது சுகாதார செய்திகள் அனைத்து மட்டத்திலுள்ள பொதுமக்களையும் சென்றடைய வேண்டும். வருமானம், உணவு, பொலிஸ் நிலையங்கள், மருத்துவமனைகள், போக்குவரத்து, இனவிருத்தி சுகாதார சேவைகள் போன்றவை குறைவாக கிடைப்பது போன்ற பொது சுகாதார நடவடிக்கைகளின் விளைவுகள் வெவ்வேறு மக்கள் குழுக்களை வெவ்வேறு விதமாகப் பாதிக்கும். சில குழுக்கள் அதிகமாகப் பாதிக்கப்படலாம், அவர்களுடைய நலன் கவனிக்கப்பட வேண்டும். எனவே தான் தீர்மானங்களை எடுப்பதில் பிரதிநிதித்துவம் முக்கியமானது. இது அனைத்து சேவைகளும் அனைவரையும் சென்றடைவதை உறுதிப்படுத்துகின்றது. அத்துடன் எடுக்கப்பட்ட முடிவுகள் பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் மீது ஏற்படுத்தும் எதிர்மறையான விளைவுகளுக்கு தயாராக இருப்பதை உறுதிசெய்யும். ஒட்டுமொத்தமாக, மக்களுக்கும், அவர்களுடைய வாழ்க்கையை நிர்வகிக்கும் அமைப்புக்களுக்கும் இடையேயான நம்பிக்கையை மேம்படுத்தும்.

## 3 அனைவரிடமும் தெளிவாக தொடர்பு கொள்ளுதல் - மக்களுக்கு அறிவிப்பதுடன், மக்களிடம் கேட்டறிதல்

சட்டங்கள் பொதுவெளியில் பகிரங்கப்படுத்தப்படுவதுடன், நன்றாக பரவச்செய்யப்பட வேண்டும். எளிய மொழியில் உள்ள சட்டம் நவீன போக்கு என்பதுடன், அது பொதுமக்களினால் இலகுவாகப் புரிந்து கொள்ளப்படுவதுடன், பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்கின்றது. பொது சுகாதார சட்டங்கள் பெற்றுக்கொள்வதற்கு இலகுவாகவும், புரிந்துகொள்வதற்கு இலகுவாகவும் இருக்க வேண்டும். பொதுமக்களுக்கான அரசாங்கத்தின் தீர்மானங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் மக்கள்
புரிந்துகொள்வதை உறுதிசெய்யும் வகையில் எளிய மொழியில் இருக்க வேண்டும் என்பதை பொது சுகாதார சட்டங்கள் வழிநடத்தலாம். சட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் மக்களை அச்சப்படுத்தக்கூடாது. சட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் அனைத்து உள்ளூர் மொழிகளிலும் பெறக்கூடியதாக இருக்க வேண்டும் மற்றும் அவற்றின் உள்ளடக்கம் இலகுவான மொழியில் இருக்க வேண்டும் என்பதையே இது குறிப்பிடுகின்றது.



## 4 அடிப்படை உரிமைகளை பாதுகாக்க வேண்டும்

நெருக்கடி நிலையின் போது அடிப்படை உரிமைகளை மீறுவதற்கான சாத்தியங்கள் அதிகம். ஏனென்றால் பிரஜைகள் மற்றும் பொதுத்துறையில் உள்ள பணியாளர்கள் அசாதாரண நிலைமைகளை அனுபவிப்பதுடன், சாதாரண கட்டமைப்புக்கு வெளியே செயற்படுகின்றார்கள். அச்சம், பீதி மற்றும் கட்டுப்பாட்டை இழப்பது என்பன அரசாங்கம் அல்லது பணியாளர்கள் அதிகப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள அல்லது அதிகப்படியான கட்டுப்பாட்டை அல்லது தன்னிச்சையான நடவடிக்கைகளை எடுப்பதற்கான முயற்சிகளுக்கு வழிவகுக்கும். அசாதாரண நிலைமையிலும், அரசியலமைப்பினால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் தொடர்ந்தும் அடிப்படைக் கட்டமைப்பாகவே இருக்கின்றன. மக்கள் எந்த நேரத்திலும் சித்திரவதை அல்லது அவமானப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள், சிந்தனை செய்யும் சுதந்திரம் தடுக்கப்படமாட்டாது, எப்பொழுதும் சமமாக நடத்தப்படுவார்கள், தன்னிச்சையாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படமாட்டார்கள், தங்களது கருத்தை வெளிப்படுத்துவதற்கும், தங்களது மதத்தை கடைப்பிடிக்கவும், தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையும் அவர்களுக்கு உள்ளது என்ற உத்தரவாதம் வழங்கப்படுகின்றது. மக்கள் தங்களது சொந்த நாட்டில் தங்களது சொந்த அரசாங்கத்தினால் துன்பத்தை அனுபவிக்க மாட்டார்கள்



என்பதை உறுதிசெய்வதற்கு அடிப்படை உரிமைகளை பாதுகாப்பது அவசியமாகும். அடிப்படை உரிமை மீறல்கள் தனிநபர்களில் நீண்ட கால பாதிப்பை ஏற்படுத்துவதுடன், மக்களுக்கும், நாட்டை நிர்வகிக்கும் அமைப்புக்கும் இடையிலான நம்பிக்கையை உடைக்கும்.

## 5 தேவையான விதிவிலக்குகளை வரையறுக்கவும் - எப்போது பலம் அல்லது நிர்ப்பந்தம் அவசியப்படும் என்பதையும், அரசாங்கத்தின் என்ன நடவடிக்கைகள் விகிதாச்சாரமாக இருக்கும் என்பதையும் தெளிவாக குறிப்பிடவும்

அசாதாரண சூழ்நிலைகளுக்கு அசாதாரண அதிகாரம் தேவைப்படும். உதாரணமாக, குற்றம் ஒன்றை செய்யாத நபர் ஒருவரை தடுத்து வைப்பது சட்டத்திற்கு எதிரானதாகும். தொற்றுநோய் காலத்தில் பிறரை தொற்றுக்குள்ளாக்கக் கூடிய சாத்தியம் உள்ள நபரை தடுத்துவைப்பதற்கு அசாதாரண அதிகாரத்தை தனிமைப்படுத்துவதற்கான அதிகாரம் வழங்குகின்றது. அரசாங்கம் அசாதாரண அதிகாரத்தை பயன்படுத்த முற்படும் போது, அந்த அதிகாரமானது சட்டரீதியாக செல்லுபடியாகும், அது அவசியமானது மற்றும் விகிதாச்சாரமாகும் என்பதை நிரூபிக்க வேண்டும். அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அதிகாரத்தை தன்னிச்சையாக பயன்படுத்துவதில் முடியவில்லை என்பதை இது உறுதிப்படுத்தும். அதிகாரங்கள் துஷ்பிரயோகப்படுத்தப்படவில்லை என்பதை உறுதிசெய்வதற்கு அசாதாரண சூழ்நிலைகளை நிர்வகிப்பதற்கான சட்டங்கள் வழிகாட்டுதல்கள், அளவுகோல்கள் மற்றும் வரம்புகளை வழங்கவேண்டும். இந்த வழிகாட்டுதல், அளவுகோல்களை உருவாக்குதல் மற்றும் வரம்புகள் தங்களது அதிகாரங்களை எப்படிப்

பயன்படுத்த வேண்டும் என அரச உத்தியோகத்தர்கள் புரிந்துகொள்ள உதவுவதுடன், பொதுமக்கள் என்ன எதிர்பார்க்க வேண்டும், தங்களது சில உரிமைகளை தற்காலிகமாக மட்டுப்படுத்துவது ஏன் அவசியம் என புரிந்துகொள்ள உதவும். மக்கள் தங்களது சொந்த அரசாங்கத்தினால் துன்பப்படுத்தப்படுவதாக உணராமல் இருப்பதற்கு இந்த புரிதல் அவசியம் ஆகும்.



## தொற்றுநோயுடன் தொடர்புடைய ஏற்கனவே உள்ள சட்டக் கட்டமைப்புக்கள்

ஏற்கனவே உள்ள சட்டங்களில் மிகவும் பொருத்தமான இரண்டு சட்டங்கள் 1897 ஆம் ஆண்டின் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டம் மற்றும் 2005 ஆம் ஆண்டின் அனர்த்த முகாமைத்துவ சட்டம் ஆகும்.

| | 1897 ஆம் ஆண்டின் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டம் | 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இல. இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டம் |
|---|---|---|
| சட்டக் கட்டமைப்பு | தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதே இந்த சட்டத்தின் நோக்கம். இது பரந்த அளவிலான விடயங்களில் சம்மந்தப்பட்ட அமைச்சருக்கு அனுமதியளிக்கின்றது,<br>• பல்வேறு பொருட்கள் மற்றும் இடங்களின் சுகாதார நிலைமைகளைப் பராமரித்தல்<br>• தொற்றுநோய் பரவுவதை தடுக்கும் நோக்கத்துடன் பொருட்கள் மற்றும் தனிநபர்களைத் தனிமைப்படுத்துதல். இது போன்ற விடயங்களில் ஏற்கனவே பல விதிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. | தொற்றுநோய் உள்ளிட்ட இயற்கையான அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவுகளை சந்திப்பதற்கு வடிவமைக்கப்பட்ட கூட்டு மற்றும் பிரதிநிதித்துவ அரசாங்க எந்திரத்தை செயல்படுத்துவதே இந்த சட்டத்தின் நோக்கமாகும். இது (அ) தேசிய அனர்த்த முகாமைத்துவ ஆலோசனைக் குழு, மற்றும் (ஆ) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தை நிறுவுகின்றது<br>சட்டம் பின்வருவனவற்றை வழங்குகின்றது<br>• பேரழிவு நிலையை பிரகடனப்படுத்துதல் (பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட பிரகடனத்தின் மூலம்)<br>• பேரழிவினை தடுத்தல் அல்லது குறைத்தல் தொடர்பான திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் நிவாரணம் வழங்குதல்<br>• உள்ளூர் மற்றும் சமூக தற்சார்புக்கு உதவுதல் மற்றும் ஆதரித்தல்<br>• அரச சார்பற்ற நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல் |
| இந்த சட்டத்தின் கீழ் மார்ச் – ஒகஸ்ட் 2020 வரையில் எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள் | 2020 மார்ச் 20 ஆம் திகதி அன்று சுகாதார அமைச்சர் நொவல் கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தப்பட வேண்டிய நோய்த்தொற்று என வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டார், அத்துடன் வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் அல்லது தொற்றுக்கு இலக்காகியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுபவர்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்பதை கட்டாயமாக்கினார்.<br>2020 மார்ச் 25 ஆம் திகதி அன்று சுகாதார அமைச்சர் இலங்கை முழுமைக்குமான 'சரியான அதிகாரத்தை' சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கியது உட்பட பல்வேறு புவியியல் இருப்பிடங்களுக்கு 'சரியான அதிகாரம்' வழங்கியதுடன், முன்னைய விதிமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தினார்.<br>2020 ஏப்ரல் 11 ஆம் திகதி அன்று, கோவிட்- 19 தொற்றினால் உயிரிழந்தவர்களின் உடல்கள் தகனம் செய்யப்பட வேண்டும் என சுகாதார அமைச்சர் உத்தரவிட்டார்.<br>கோவிட் - 19 தொற்றுக்கான குறிப்பிடத்தக்க விதிமுறைகள் எதுவும் செயற்படுத்தப்படவில்லை. | எதுவுமில்லை |

*[2] Gazette (Extraordinary) dated 20th March 2020 [No.2167/18]*

*[3] Gazette (Extraordinary) dated 20th March 2020 [No.2167/18]*

*[4] Gazette (Extraordinary) dated 25th March 2020 [No. 2168/6]*

பொதுச் சுகாதாரத்துடன் தொடர்பற்ற சட்டங்கள், பொது ஒழுங்கை சாதாரணமாக காவற்துறையினால் கட்டுப்படுத்த முடியாத சந்தர்ப்பங்களில், மீறப்பட்டால் அல்லது அவ்வாறான மீறல்கள் இடம்பெறவிருந்தால் மாத்திரம் பயன்படுத்தப்படும். எனினும், இந்த சட்டங்கள் மேற்பார்வை மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் தீவிர கவனத்தை செலுத்துகின்றன. பொது சுகாதாரம் மற்றும் நல்வாழ்வுடன் தொடர்புடைய நெருக்கடியின் போது இதனைப் பயன்படுத்தவது பொருத்தமானதல்ல.

| | 1883 ஆம் ஆண்டின் தண்டனைச் சட்டக்கோவை | 1947 ஆம் ஆண்டின் பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் |
|---|---|---|
| **சட்டக் கட்டமைப்பு** | தண்டனைச் சட்டக்கோவையின் 14 ஆவது அத்தியாயம் பொது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை பாதிக்கும் குற்றங்களைக் குறிப்பிடுகின்றது.<br><br>தண்டனைச் சட்டக்கோவையின் 261 ஆவது பிரிவு குறிப்பிடுவது என்னவென்றால்:<br>நபர் ஒருவர் ஏதாவதொரு நடவடிக்கையினால் அல்லது சட்டவிரோத புறக்கணிப்பினால், பொதுமக்களுக்கு அல்லது சுற்றியுள்ள பகுதியில் வசிக்கும் அல்லது சொத்துக்களைக் கொண்டிருக்கும் பொது மக்களுக்கு பொதுவான காயம், ஆபத்து அல்லது எரிச்சலை ஏற்படுத்தினால் அல்லது பொது உரிமையைப் பயன்படுத்தும் மக்களுக்கு காயம், தடை, ஆபத்து அல்லது எரிச்சலை ஏற்படுத்தி தொல்லை கொடுத்தால் குற்றவாளியாவார். பொதுமக்களுக்கு தொல்லைகளை ஏற்படுத்தியதனால் வசதிகள் அல்லது நன்மைகள் ஏற்படுகின்றது என்ற காரணத்தினால் அது மன்னிக்கப்படுவதில்லை.<br><br>தண்டனைச் சட்டக்கோவையின் 262 ஆவது பிரிவு குறிப்பிடுவது என்னவென்றால்:<br>யாரேனும் சட்டவிரோதமாக அல்லது அலட்சியமாக எந்தவொரு செயலையும், தெரிந்தோ அல்லது நம்புவதற்கு காரணம் உள்ளபோது, உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு நோய்த்தொற்றையும் பரப்பினால், ஆறு மாத காலத்திற்கு நீட்டிக்கக்கூடிய சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டுமே விதிக்கப்படும். | பொதுமக்களின் பாதுகாப்பு நலனுக்காக, பொது ஒழுங்கை பாதுகாப்பதற்காக, அல்லது சமூகத்தின் வாழ்க்கைக்கு அவசியமான பொருட்கள் மற்றும் சேவைகளை பராமரிப்பதற்காக பொது அவசரகாலநிலை உள்ளதை அல்லது வரவிருப்பதை வர்த்தமானியின் பிரகடனத்தால் அறிவிப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரத்தை வழங்குகின்றது.<br><br>அவ்வாறான பிரகடனம் பாராளுமன்றத்தினால் அனுமதியளிக்கப்படாவிட்டால், அது ஒரு மாத காலத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும்.<br><br>ஜனாதிபதி<br>• பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பொது ஒழுங்கை பாதுகாப்பதை கருத்திற் கொண்டு ஜனாதிபதி அவசரகால விதிமுறைகளை உருவாக்கலாம்.<br>• பொது ஒழுங்கை பராமரிப்பதற்காக ஊரடங்கு உத்தரவினை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஆணைப்படி அறிவிக்கலாம்.<br>• பொதுமக்களின் நலனுக்கு அவசியமானவை எனக் கருதப்படும் மற்றும் சமூகத்தின் வாழ்க்கைக்கு இன்றியமையாத அவ்வாறான சேவைகளை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஆணையின் பிரகாரம் அத்தியாவசியமான சேவைகள் என பிரகடனப்படுத்தலாம். |

# இலங்கைக்கென
# தனித்துவமான பரிந்துரைகள்

மார்ச் 2020 முதல் செப்டெம்பர் 2020 வரையில் பயன்படுத்தப்பட்ட சட்டங்கள் மற்றும் கொள்கை நடவடிக்கைகளை மதிப்பிட்டு இந்த பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வறிக்கையின் ஆரம்பத்தில் விவாதிக்கப்பட்ட பொது சுகாதார சட்டக்கட்டமைப்பு மாதிரியின் தழுவலை இந்த பரிந்துரைகள் பிரதிபலிக்கின்றன.

## 1 பொருத்தமான சட்டங்களை உருவாக்கி பயன்படுத்துதல்

இலங்கையின் தனிமைப்படுத்தல் கட்டளைச்சட்டம் தெளிவற்ற வார்த்தைகளைக் கொண்டுள்ளது (காலனித்துவ சட்டத்தின் அம்சம்). தற்போதைய நோய்த்தொற்றுக்கு அதனை பயன்படுத்த வேண்டுமானால், தீர்மானத்தை எட்டுவதில், குறிப்பாக பாதிக்கப்படும் துறைகளின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் புதுப்பிக்கப்படுவதுடன், மாற்றப்பட வேண்டும். உதாரணமாக, சுகாதார அமைச்சரின் முடிவுகளை அறிவிப்பதற்கு ஆலோசனைக் குழுவை அமைப்பது மற்றும் அந்தக் குழுவில் பெண்கள், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள், தினக்கூலியாளர்கள், முதியவர்களின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சிரேஷ்ட பிரஜைகள், ஊனமுற்றவர்களின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஊனமுற்றவர்கள், தொழிற்துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தொழிலாளர்கள், தோட்டத்துறை, கல்வித்துறை, விவசாயத்துறை போன்றவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தொழிலாளர்கள் உள்ளார்களா என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.



தெளிவற்ற வார்த்தைப் பிரயோகத்தின் விளைவாக, பரந்த அளவிலான நடவடிக்கைகளில் விதிமுறைகள் உருவாக்கப்படலாம். எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை வலுப்படுத்தும் வகையில், கோவிட் – 19 தொற்றுக்கான குறிப்பிட்ட விதிமுறைகள் உருவாக்கப்பட வேண்டியது அவசியம், இல்லாவிட்டால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் சட்டரீதியானதாக இருக்காது.

விதிமுறைகளை உருவாக்கும் போது, அவை:

இணைக்க வேண்டும் (அறிவியல் தகவல்களின் அடிப்படையில்),

தொடர்புகொள்ள வேண்டும் (பொதுமக்களுக்கு அறிவிக்கும் மற்றும் கேட்டறியும் பொது தகவல் தொடர்பாடலை வழங்க வேண்டும்),

பாதுகாக்க வேண்டும் (பொதுமக்கள் மற்றும் அவர்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்கான தேவை குறித்து அரச உத்தியோகத்தர்களுக்கு வலியுறுத்தல்) மற்றும்

தேவையான விதிவிலக்குகளை வரையறுக்க வேண்டும் (உதாரணமாக, நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதை யார் முடிவு செய்யலாம் மற்றும் எவ்வளவு காலத்துக்கு என்பதை வரையறுக்கவும்)



மாற்றாக, கோவிட் - 19 தொற்றினை கையாள்வதற்காக விசேட புதிய சட்டத்தை உருவாக்கவும். விசேட சட்டம் எனும் போது, பொருத்தமான முடிவு திகதியை – அதாவது சட்டம் எப்பொழுது முடிவுக்கு வரும் என்பதற்கான திகதி அல்லது நிபந்தனையை உள்ளடக்கியுள்ளதை உறுதிப்படுத்துவது அவசியம். இணைப்பு, தொடர்பு, பிரதிநிதித்துவம், பாதுகாப்பு மற்றும் தேவையான விதிவிலக்குகளை வரையறுப்பது ஆகியவற்றை விசேட சட்டம் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். விசேட சட்டம் பரந்த நிர்ணயிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டிருப்பதுடன், அவ்வாறான அதிகாரங்கள் தேவைப்படும் காலப்பகுதிக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதை உள்ளடக்கியிருப்பது அவசியம். இது சாதாரண சந்தர்ப்பங்களில் ஜனநாயகப் பண்புகளை மீறும் வகையில் அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்வதிலிருந்து பாதுகாக்கும்.

## 2 நிவாரண வழிமுறைகளை வழங்குதல்

### 2.1 நீதிமன்றங்களை அணுகுவதை உறுதிப்படுத்துதல்:

பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், நிதிப் பராமரிப்பு மற்றும் ஒருவருடைய உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகிய காரணங்களுக்காக இது முக்கியமானது. அவசரகால சூழ்நிலையில் கூட - உண்மையில் முக்கியமாக அவசரகால சூழ்நிலையின் போது – நீதிமன்றங்கள் தொடர்ந்து இயங்க வேண்டும், பொதுமக்களுடன் ஈடுபட வேண்டும், அத்துடன் அணுகல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம். (உதாரணம், நீதிமன்றத்திற்கு வருகை தராமல் காணொளி வாயிலாக நீதிமன்ற விசாரணைகளை முன்னெடுத்தல், இது சில மட்டுப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் இடம்பெற்றதாகத் தெரிகின்றது). பொது தொடர்பாடல் மூலோபாயத்தின் ஒரு பகுதியாக பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவது மற்றும் கவலைகள், புகார்களை பெற்றுக்கொள்வது இருக்க வேண்டும்.



பொது சுகாதார நெருக்கடியின் போது, வழக்குத் தொடுப்பவர்கள் வழக்கு தாக்கல் செய்வதில் சட்டரீதியான சவால்களை எதிர்கொள்ள நேரிடும் போது, தொழில்நுட்ப விதிமுறைகள், அதாவது சில விண்ணப்பங்களை தாக்கல் செய்வதற்கான கால எல்லையை தளர்த்த வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரையில், ஒரு மாத கால அவகாசத்தைக் கொண்ட அடிப்படை உரிமைகள் மனுக்களுக்கு இது மிகவும் முக்கியமானதாகும். அடிப்படை உரிமைகள் மற்றும் ரிட் விண்ணப்பங்களுக்கு கால அவகாசம் பெற்றுக்கொள்ளப்பட்டால், அரசாங்கத்தின் நடவடிக்கையை கட்டுப்படுத்தும் முக்கிய ஒன்றாக அமையும். இது முக்கியமாக சிறுபான்மையினர் மற்றும் பாதிக்கப்படக்கூடிய சமூகத்தினரின் உரிமைகளை பாதுகாப்பதற்கு பயனுள்ளதாக அமையும்.

## 3 எதிர்வினையாற்றுகின்ற மற்றும் பொறுப்பான கொள்கைகளை ஏற்றுக்கொள்ளுதல்

### 3.1 மாறிவரும் சமூக – பொருளாதார தீர்வுக் கொள்கையை ஏற்றுக்கொள்ளுதல்:



பொருளாதார தாக்கம் என்பது உணவுக்கான உதவி, வாடகைக்கான உதவி, சூழலுக்குப் பொருத்தமான சுகாதார வசதிகள் (குறிப்பாக முறையான வீடு அற்றவர்களுக்கு), இனவிருத்தி மற்றும் சுகாதார சேவைகள் மற்றும் தொழிலாளர் தொடர்பான பாதுகாப்புக்களுக்கான தேவைகளை உள்ளடக்க வேண்டும். பொது சுகாதார சட்டக் கட்டமைப்பு இந்த உண்மையை அங்கீகரிப்பதுடன், பிற அரச நிறுவனங்களுடன் இணைந்து தேவைகள் ஏற்படும் போது அவற்றை தீர்த்து வைக்க வேண்டும். பதில்கள் குறித்த நேரத்தில் வழங்கப்படுவதுடன், ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டவையாக இருக்க வேண்டும் என்பதை சட்டம் உறுதிப்படுத்த வேண்டும். பொருத்தமான சட்டம் மற்றும் பொறிமுறை, சுகாதார நெருக்கடிக்கு முன்னதாக, தனிநபர்கள் மற்றும் இலங்கையின் தேயிலைத் தோட்டங்களில் தொழில் புரியும் தொழிலாளர்கள் போன்ற பொருளாதார ரீதியாக பின்தங்கிய சமூகத்தினரை முன்நிறுத்த வேண்டியது அவசியம், ஏனென்றால் இது அவர்களை மேலும் அதிகமாக பாதிக்கக்கூடிய நிலைக்கு தள்ளும்.

### 3.2 பாதுகாப்பு அணுகுமுறையை பின்பற்ற வேண்டாம்:

பொது சுகாதாரப் பதில்களைப் பொறுத்தவரை, பொது சுகாதார அதிகாரிகள் வழிநடத்துவதுடன், அரசாங்கத்தின் தீர்மானங்களை அறிவிக்கும் பிரதிநிதிகளாக இருக்க வேண்டிய தேவை உள்ளது. பொது மக்கள் உறவுகளில் முதன்மையான அமுலாக்க அமைப்பாக காவல்துறை உள்ளது. பொதுமக்களின் விடயத்தில் இராணுவத்தினரை ஈடுபடுத்துவது இறுதி முயற்சியாக இருக்க வேண்டும், அவ்வாறு ஈடுபடுத்தினாலும் அது மட்டுப்படுத்தப்பட்டதாகவும், தேவையான நடவடிக்கைகளுக்காகவும் மாத்திரமே இருக்க வேண்டும். பொது சுகாதார அவசரநிலைக்கு பதிலளிப்பதற்கு அமுலாக்க மூலோபாயத்தில் அதிகளவில் தங்கியிருப்பது, முக்கியமாக இராணுவத்தினரை ஈடுபடுத்தும் அமுலாக்கம், குறுகிய மற்றும் நீண்ட கால விளைவுகளின் ஆபத்தைக் கொண்டிருக்கும். குறுகிய காலத்தில் நோய்த்தொற்று குறித்து அறிவிக்காமல் விடலாம், நீண்ட காலத்தில் பொதுமக்களின் நம்பிக்கை குறைவதற்கு பங்களிக்கலாம்.

## 3.3 சமூக உறவுகளை பலப்படுத்துவதற்கு கருவியாக ஊடகங்கள் மற்றும் தனியுரிமையை மதிப்பதை பயன்படுத்துதல்:

கோவிட் - 19 தொற்றின் போது சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்கள் வருமாறு:

- கோவிட் - 19 தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்ட மற்றும் துல்லியமான தகவல்களை மாத்திரம் அறிக்கையிடவும்
- கோவிட் - 19 தொற்றுக்குள்ளான நபர்கள் அல்லது அதனால் உயிரிழந்தவர்களின் இனம் அல்லது மதத்தினை குறிப்பிட வேண்டாம்
- கோவிட் - 19 தொற்றுக்கு இலக்கானவர்களை நோயாளிகளாக அடையாளம் காணுங்கள், மாறாக நோய்த்தொற்றுக் காவிகளாக அடையாளம் காண வேண்டாம்
- தொழில்நுட்ப மற்றும் அறிவியல் அடிப்படையில் அறிக்கையிடவும், மாறாக வெவ்வேறு நபர்களின் தனிப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் அறிக்கையிட வேண்டாம்
- கோவிட் - 19 தொற்றுக்கு உள்ளானவர்களின் புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை அவர்களுடைய அனுமதி இல்லாமல் வெளியிட வேண்டாம்
- கோவிட் - 19 இனால் உயிரிழந்தவர்களின் இறுதிச் சடங்குகளில் எடுக்கப்பட்ட உணர்ச்சிபூர்வமான காணொளிக் காட்சிகளை காட்டும் போது, காட்சிகளை மங்கலாக்குவது சிறந்தது
- மக்களுக்கு இடையே வெறுப்பினை உருவாக்கும் வகையில் அறிக்கையிட வேண்டாம்
- நோய்த்தொற்றுடன் போராடும் மக்களுக்கு இடையே ஒத்துழைப்பு மற்றும் ஆதரவை உருவாக்கும் வகையில் கோவிட்
  - 19 குறித்து நேர்மறையான முறையில் அறிக்கையிடவும்

எந்தவொரு பொது சுகாதார நெருக்கடியின் போதும் ஊடகங்கள் அறிக்கையிடுவதற்கு இந்த வழிகாட்டுதல்கள் பொருந்தும் என பரிந்துரைக்கப்படுகின்றது. அரச ஊடகங்கள் சிறந்த நடைமுறையை மாதிரியாகக் கொண்டிருக்க வேண்டும், அத்துடன் ஆக்கபூர்வமற்ற செய்திகளை குறைக்க வேண்டும்.



### 3.4 பயனுள்ள பொது தொடர்பாடல் கொள்கையை நடைமுறைப்படுத்தவும்:

அரசாங்கம் மற்றும் மக்களுக்கு இடையே பயனுள்ள தொடர்பாடல் அவசியம். பின்வருவன பரிந்துரைக்கப்படுகின்றது:

- சம்மந்தப்பட்ட சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் தெளிவாகவும், இலகுவான மொழியிலும் அனைத்து முக்கிய ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக உள்ளூர் மொழிகள் அனைத்திலும் பரவலாக விளம்பரப்படுத்தப்பட வேண்டும்.
- பொதுமக்கள் தங்கள் குறைகள் மற்றும் கவலைகளை அரசாங்க அதிகாரிகளுக்கு தெரிவிக்கும் வகையில் கருத்துக்கள் மற்றும் புகார்களை எளிதாக்குவதற்கு பொது உரையாடல் பொறிமுறைகள் அமைக்கப்பட வேண்டும். இது பொதுமக்களுக்கான செயற்பாடு, அனைத்து உள்ளூர் மொழிகளிலும் பரிவுடன் பேசக்கூடிய சிவில் நிர்வாகிகளினால் இது தலைமை தாங்கப்பட வேண்டும். இதில் இராணுவத்தினரை ஈடுபடுத்தக்கூடாது.
- ·தகவல்களைப் பரப்புவதற்கும், பொதுமக்களிடம் இருந்து கிடைக்கும் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்கும், பதிலளிப்பதற்கும் உள்ளூர் அரச உத்தியோகத்தர்கள் கல்வி, பயிற்சி மற்றும் வழிகாட்டுதல்களை பெற்றுக்கொள்ள வேண்டும். வழங்கப்பட்டுள்ள கட்டமைப்பிற்குள் தகவல்களை திறம்பட பரப்புவதற்கும், மக்களுடன் பயனுள்ள தொடர்புகளைப் பேணுவதற்கும் பதில்களை உள்ளூர்மயமாக்குவது முக்கியமான நடவடிக்கை ஆகும்.
- பொது சுகாதார நிலைமையின் உண்மை நிலையை (உதாரணம்: தொற்று விகிதம், தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகள், நடமாட்டத்துக்கான கட்டுப்பாடுகள் முதலானவை) சம்மந்தப்பட்ட பொது சுகாதார அதிகார சபை தொடர்ச்சியாக புதுப்பிக்கப்பட்ட தகவல்களை வெளியிடுவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். நம்பகமான அரசாங்கத் தகவல்கள் தவறான, சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட சிறுபான்மை சமூகத்தினரை அல்லது பிற பாதிக்கக்கூடிய குழுக்கள் அல்லது தனிநபர்களை வேண்டுமென்றே இலக்கு வைக்கும் வகையிலான தகவல்கள் உள்ளிட்ட தவறான தகவல்கள் நம்பப்படுவதை குறைக்கும்.
- தவறான தகவல் மற்றும் பொது விமர்சனங்கள் கையாளப்பட வேண்டும்:
  - சரியான தகவல் அல்லது திருத்த நடவடிக்கைகளுடன் பகிரங்கமாக பதிலளித்தல்
  - பொதுமக்களின் குறைதீர்க்கும் பொறிமுறைகளை உருவாக்குதல்
  - பொது விமர்சனங்களை விரோதப் போக்காகக் கவனிக்கக்கூடாது, மாறாக குறைகளை நிவர்த்தி செய்வதற்கான வாய்ப்பை உருவாக்கும் பொதுமக்களின் அனுபவங்களைப் புரிந்துகொள்ளும் ஒரு வழியாக கருதப்பட வேண்டும்.

